மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத் தனிக் கேள்வி கேட்க வேண்டும். துணை வினா மூலவினாவை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன சலுகைகள் என்பதைத் தனியாகக் கேட்கவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 66, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

66—.

இராமநாதபுரம் அரசு கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு ஆரம்பித்தல்.

*10850—டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் அரசு கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். இங்கே ஒரே ஒரு அரசு கலைக் கல்லூரியும், ஒரு தனியார் கல்லூரியும் இருக்கின்றன. தனியார் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் இல்லை. ஆகவே கல்வியின் மூலம் பொருளாதார முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியின் ஆட்சியில் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் முன்னேற்றம் கருதி, இந்தப் பகுதி வாழ் மக்களின் நலம் கருதி, பட்ட மேற்படிப்பைத் துவங்க மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 பிப்ரவரி 12]

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் கலைக் கல்லூரியானது பட்டப் படிப்பு வகுப்புகளைக் கொண்டு நடைபெற்று வருகின்றது. அந்தக் கல்லூரி கடந்த சில ஆண்டுகளாக சரியாக நடைபெறாமலிருந்து, நாம் சில நடவடிக்கைகளை எடுத்து, இப்போது பரவாயில்லை என்ற நிலைமை வந்திருக்கின்றது. அதில் இருக்கிற வகுப்புகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்ற நிலைமை வந்ததற்குப் பிறகு பட்ட மேற்படிப்பு தொடங்குவது பற்றி நாம் பரிசீலனை செய்யலாம்.

டாக்டர். எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் அடிக்கடி ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டு கல்லூரி அடைத்துக் கிடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். இங்கே பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டால் இந்தப் பகுதி வாழ் மக்களின் முன்னேற்றம் கருதி செய்தால், இவ்வாறு இருக்கிற பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே நிதி பற்றாக்குறை இருக்கிற இந்தக் கட்டத்தில் புதிய கல்லூரி தொடங்க வாய்ப்பு இல்லாத காரணத்தால், இருக்கிற ஆசிரியர்களை வைத்து அரசுக்கு அதிகச் செலவு இல்லாமல் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், எம்.ஏ., (தமிழ்), எம். ஏ., (ஆங்கிலம்), எம். காம்., போன்ற வகுப்புகளைத் தொடங்க அரசு உடனடியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ட மேற்படிப்பு என்று ஒரு வகுப்பைத் தொடங்கினாலே கூடுதல் செலவுக்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, செலவைப்பற்றி நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அரசின் நிதிநிலையில வருகிற நிதிநிலை அறிக்கையில், எந்த அளவுக்கு பணம் ஒதுக்கப்படுகிறதோ அந்த அடிப்படையில் இதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தளைவர்: வினா எண். 67, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

67—

Approval by Pollution Control Board for New Industries

* 9166 Tmt. K. Mariaulasia :

Will the Hon the Minister for Health be pleased to state ;